அரசாங்க சேவை ஆணைக்குழு

இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின்

விசேட தரத்திற்கு உயர்த்துதல் – 2026

இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் விசேட தரத்திற்கு மேலதிக செயலாளர் (கால்நடை அபிவிருத்தி), மேலதிக பணிப்பாளர் நாயகம் (விலங்கு சுகாதாரம்), மேலதிக் பணிப்பாளர் நாயகம் (கால்நடை ஆராய்ச்சி) மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் (கால்நடை வள அபிவிருத்தி) அட்டவணையிடப்பட்ட 04 பதவிகளுக்காக காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய அதிகாரிகளின் பதவி உயர்வுக்கான இலக்கம் 1840/51 மற்றும்13.12.2013 திகதியிட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் புதிய சேவை அரசியலமைப்புச் சட்டத்தின் விதிகளின்படி இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தர சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. சம்பள அளவு**

25.03.2025 திகதிய இல 03/2016 உடைய நிர்வாக சுற்றறிக்கை அட்டவனை II இன் படி, இந்த பதவியின் மாத சம்பளம் ரூ. .156,000 – 12 × 4,850 – 214,200 (SL-3-2025)ஆகும்.

**03. பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்**

03.1 விண்ணப்பம் கோரல் இறுதி திகதிக்கு முன்னர், இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் 18 வருட அனுபவம் மற்றும் திருப்திகரமான முழுமையடைந்த உத்தியோகத்தராக இருத்தல்.

03.2 விண்ணப்பம் கோரல் இறுதி திகதிக்கு முன்னதாக, இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் I ல் 05 வருட அனுபவம் மற்றும் திருப்திகரமான சேவையை நிறைவு செய்து தரம் I க்கு பதவி உயர்வு பெற்றதன் பிறகு ஐந்து (05) சம்பள உயர்வுகளைப் பெற்றிருக்க வேண்டும்.

03.3 விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு முன்னைய ஐந்து (05) ஆண்டுகளில் வருடாந்த செயல்திறன் திருப்திகரமான நிலை அல்லது அதைவிட உயர்வாக இருத்தல்.

03.4 அரச சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் விதிகளுக்கு இணங்க எந்த ஒழுக்காற்று தண்டணைக்கு உள்ளாகவில்லை.

03.5 தரம் I உத்தியோகத்தர்களுக்கான பொருத்தமான வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சை மற்றும் பொருத்தமான பயிற்சியில் தேர்ச்சி பெற்று தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்.

04. அதற்கமைய இப்பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய உத்தியோகத்தர்களின் உயர்வுக்கான மாதிரி விண்ணப்பங்கள் இத்துடன் கோரப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே விண்ணப்பங்களை விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் நிறுவனத் தலைவரின் அனுமதியுடன் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.07.10 க்கு முன்னர் பதிவுத் தபாலில் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் விசேட தரத்திற்கு உயர்த்துதல்" எனும் சொற்றொடர் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்  
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்  
த.பெ.இல 13, கெட்டம்பே  
பேராதெனிய.

05. பெறப்படும் விண்ணப்பங்களின்படி, தகுதிகளை பூர்த்தி செய்த சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள் மற்றும் முடிவுகளின்படி, அதிக புள்ளிகள் பெறும் அதிகாரிகள் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விசேட தரத்திற்கான பதவி உயர்வு அரச சேவைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும்.

06. திட்டமிடப்பட்ட நேர்முகப்பரீட்சையின் புள்ளிகள் வழங்கப்படுவது விடயதானம் மற்றும் அதிகூடிய புள்ளிகளின் அளவு

| புள்ளிகள் வழங்கப்படும் பிரிவு | வழங்கப்பட்ட புள்ளிகளின் அளவு |
|---|---|
| சிரேஷ்ட நிலை 40 | தரம் I இல் 05 வருடங்கள் செயலில் உள்ள சேவைக்கு அப்பால் மிகவும் கூடுதல் அனுபவம் மற்றும் திருப்திகரமான சேவையைக் கொண்ட சரேஷ்ட அதிகாரிக்கு அதிக மதிப்பெண்கள் வழங்கப்படும் மற்றும் மீதமுள்ள அதிகாரிகளுக்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.<br><br><u>சிரேஷ்ட நிலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளிகள் X</u><br>அதிக அனுபவம் மற்றும் திருப்திகரமான சேவையைக் கொண்ட அதிகாரியின் அந்த சேவைக் காலம் (ஆண்டுகள் X 12 + மாதங்கள்)<br><br>உரிய உத்தயோகத்தரின் அனுபவம் மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் (ஆண்டுகள் X 12 + மாதங்கள்) |
| திறமை 60 | 2.1 இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் I பதவியில் சேவை காலம் - அதிகபட்சம் புள்ளிகள் 10<br><br><u>தரம் -I பதவியில் சேவை காலத்திற்கு ஒதுக்கப்பட்ட அதிகபட்ச புள்ளி X</u><br>தரம் -I பதவியில் அதிக சேவைகாலம் பணியாற்றிய அதிகாரியின் சேவைகாலம் (ஆண்டுகள் X 12 + மாதங்கள்)<br><br>உரிய உத்தயோகத்தரின் I தர பதவியின் சேவைக்காலம் (ஆண்டுகள் X 12 + மாதங்கள்)<br><br>2.2 தொழில்முறை செயல்பாடு (விளக்கக்காட்சி) – அதிகபட்ச புள்ளிகள் 20<br>• உள்வாங்கலில் துறையின் முன்னேற்றத்திற்கான பங்களிப்பு - 08 புள்ளிகள்<br>• பரிசோதனை சபையால் குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளுக்கான பதில்கள் – 05 புள்ளிகள்<br>• விளக்கக்காட்சி நடை மற்றும் நேர மேலாண்மை - 04 புள்ளிகள்<br>• தயாரிப்பு, வடிவமைப்பு - 03 புள்ளிகள்<br>(கால்நடை துறையின் முன்னேற்றத்திற்காக அதிகாரி ஆற்றிய கடமைகள் பற்றிய 10 நிமிட கணினி உதவி விளக்கக்காட்சி முன்வைக்கப்படல் வேண்டும். உரிய காலத்திற்கு ஏற்றவாறு விருப்பப்படி தேர்வு செய்து கொள்ளலாம். அதிகாரியின் கடமைகளை நிரூபிக்கும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)<br><br>**2.3 ஏனைய தகைமைகள் – அதிகபட்ச புள்ளிகள் 25**<br>• சர்வதேச அளவில் பெற்றுக்காண்ட சிறந்த சாதனைகளுக்காக- 10 புள்ளிகள்<br>• தேசிய அளவில் பெற்றுக்காண்ட சிறந்த சாதனைகளுக்காக - 07 புள்ளிகள்<br>• மாகாண அளவில் பெற்றுக்காண்ட சிறந்த சாதனைகளுக்காக – 05 புள்ளிகள்<br>• பாராட்டுக் கடிதங்கள் (பொதுவான படிவத்தில் 230B) - 03 புள்ளிகள்<br>• சர்வதேச அளவில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகளுக்காக(International Research Publication) - 10 புள்ளிகள்<br>✓ Full Paper in peer reviewed journals, Book Chapter - 10 புள்ளிகள்<br>✓ Extended Abstract - 07 புள்ளிகள்<br>✓ Abstract - 05 புள்ளிகள்<br>தேசிய அளவில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகளுக்காக (Local Research Publication) - 07 புள்ளிகள்<br>(இந்த அதிகாரியின் நேரடிப் பங்களிப்பை திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்தப்படுவதுடன், மேலும் ஒரு ஆவணத்திற்கு 05 புள்ளிகள் அதிகபட்சம் 25 |

| | |
|---|---|
| | நிகழ்வுகளுக்கு வழங்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு முன்னர் மேற்கண்ட மற்ற அனைத்துத் தகுதிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பது அவசியம். பொதுவான 230B படிவத்தில் உள்ள சுயவிபர கோவையில், தொடர்புடைய பாராட்டுச் சான்றிதழ் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே, பாராட்டுக்கான புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.)<br><br>2.4<u>நேர்முக பரீட்சையில் வெளிப்படுத்திய திறமை - அதிகபட்ச புள்ளி 05</u><br>தலைமைத்துவம் - புள்ளி 02<br>மொழித்திறன் - புள்ளி 02<br>தொடர்பாடல் திறன் - புள்ளி 01 |
| மொத்த புள்ளிகள் 100 | |

07. விண்ணப்பங்களைப் பெறுவதற்கான இறுதி திகதியின்படி தொடர்புடைய தகுதிகளை பூர்த்தி செய்த அதிகாரிகள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவம் மற்றும் வேறு ஆவணங்களில் முறையாக உறுதிபடுத்தப்பட்ட பிரதிகள் அடங்கிய கோவையுடன் அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளுக்கமைய,

ஏ.யு.கே.தொடன்வல
செயலாளர் (க.பா)
கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு